அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
(Peer Reviewed Journal Multidisciplinary)
ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

Vol:8 Issue :31 July 2026

கோட்டை:8 வாயில்:31 ஜூலை 2026

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

EDITORIAL BOARD

Founder / Editor in Chief

Dr PRIYAKRISHNAN

Publisher

MR P. JAYAKRISHNAN

Editorial Board Members

Dr V SELVAKUMAR

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India

Dr. Ravindran A/L Maraya

Head of Department & Senior Lecturer, Department of Indian Studies (DIS), Universiti Malaya, Kuala Lumpur, Malaysia.

Dr Silllalee A/L S.Kandasamy

Senior Lecturer, Department of Indian Studies, Universiti Malaya,

Dr. S. KAVITHA

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

Dr.K.DAYANIDHI

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India.

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

EDITORIAL BOARD

Dr O.MUTHIAH

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University)
Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

DR UMADEVI

Professor In Tamil, Department of Modern Indian Languages And
Literery Studies University of Delhi,Delhi.

DR JAGADEESAN.T.

Assistant Professor of Tamil, Department of Indian Languages,
Faculty of Arts, Banaras Hindu University,
Varanasi- 221005, Uttar Pradesh,India.

DR SENTHIL PRAKASH.S

Teacher – in- charge/Assistant professor (SG),Department of
Tamil, Institute of Languages, Literature& culture,
Visva – Bharathi University,Santiniketan,West
Bengal, India -731235

DR R TAMILSELVAN

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

Dr SWARNAVEL ESWARAN

Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA.

Dr (Ms.) NILANKA LIYANAGE

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,
Eastern University Srilanka

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

EDITORIAL BOARD

Mrs THULSIVANTHANA UDAYASHANKAR

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of Aesthetic Stidies ,Eastern University, Srilanka

Dr B. DHANANJAYAN

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet, Chennai - 600 021.

Dr P.SEKAR

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.

நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

இதழாக்கம்

திரு ப. ஜெயகிருஷ்ணன்

முதன்மை ஆசிரியர்

முனைவர் பிரியாகிருஷ்ணன்

+917299587879

www.aranejournal.com

aranjournal@gmail.com

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழ்

அ.முத்துலிங்கம் சிறுகதைகளும் கலைச்சொற்களும்

A.Muthulingam Short Stories and Technical Terms

***Revathi R**, Research Scholar, Department of Tamil, Presidency College (Autonomos) Chennai - 600005*

*Guide : **Dr.R.Pasupathy,** Associate Professor And Head Of the Department, Department Of Tamil , Dr. Puratchithalaivar M.G.R Government Arts And Science College, Kudavasal, Thiruvarur-612601*

ரேவதி ரெ , முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, மாநிலக் கல்லூரி(த.) சென்னை- 600 005

நெறியாளர் : முனைவர் . இரா. பசுபதி, இணைப் பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்

தமிழ்த் துறை டாக்டர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி குடவாசல் ,திருவாரூர்-612601

Abstract

Technical Terminology Formation is an evolutionary process occurring in languages across the world. In Tamil as well, it is evident that technical terms are being coined effectively. One of the most effective means for these Tamil technical terms to reach the masses is through the works of writers. When technical terms are used in poetry, short stories, and novels that are widely read by the public, they gain significant attention and acceptance. Diaspora Literature occupies a prominent place in modern literature. These works are authored by diaspora writers who have left their homeland and migrated to foreign lands due to war, employment, or education. Their writings often reflect memories of the homeland, the longing caused by separation, and the challenges encountered in the host countries. In stories centered on such contexts, when referring to the customs, household items, transportation, and science and technology-related terms of the host countries, it is observed that authors predominantly employ Tamil technical terms rather than borrowing from English. This paper examines the technical terms featured in the short stories of A. Muthulingam, one of the diaspora writers who undertakes such efforts.

***Key Words**: Terminology, A.Muttulinkam, Short Stories, Writing Style, Technical Terms*

ஆய்வுச் சுருக்கம்

கலைச்சொல்லாக்கம் என்பது உலகின் அனைத்து மொழிகளிலும் நிகழும் மொழி வளர்ச்சியின் ஒரு பரிணாமமமாகும். தமிழ் மொழியிலும் அறிவியல், தொழில்நுட்பம், நிர்வாகம் சார்ந்த புதிய கருத்தாக்கங்களுக்கு ஏற்ப கலைச்சொற்கள் சிறந்த முறையில் உருவாக்கப்பட்டு வருகின்றன.இவ்வாறு உருவாக்கப்படும் தமிழ் கலைச்சொற்கள் மக்களிடையே சென்றடைவதற்கு இலக்கியப் படைப்புகள் முக்கிய ஊடகமாகத் திகழ்கின்றன. கவிதை, சிறுகதை, புதினம் போன்ற வாசிப்பு இலக்கியங்களில் கலைச்சொற்கள் பயன்படுத்தப்படும்போது, அவை வாசகர்களால் இயல்பாக உள்வாங்கப்பட்டு மொழி நடையில் நிலைபெறுகின்றன.நவீன தமிழ் இலக்கியத்தில் முக்கிய இடம் வகிப்பது புலம்பெயர் இலக்கியம் ஆகும். போர், பணி, கல்வி போன்ற காரணங்களால் தாயகத்தை விட்டுப் புகலிட நாடுகளுக்குச் சென்று, 'புலம்பெயர் எழுத்தாளர்கள்' என்ற அடையாளத்துடன் எழுதும் படைப்பாளிகள் தங்கள் படைப்புகளில் தாய்மண் ஏக்கம், புலம்பெயர் வாழ்வின் சிக்கல்கள், கலாச்சார மோதல்கள் ஆகியவற்றைப் பதிவு செய்கின்றனர்.இத்தகைய கதைகளில் புகலிட நாடுகளின் பழக்கவழக்கங்கள், புழங்கு பொருட்கள், போக்குவரத்து, அறிவியல் தொழில்நுட்பம் ஆகியவற்றைக் குறிப்பிடும்போது, ஆங்கிலக் கலப்பைத் தவிர்த்து தமிழ் கலைச்சொற்களைப் பயன்படுத்தும் போக்கு புலம்பெயர் எழுத்தாளர்களிடம் அதிகம் காணப்படுகிறது. அவ்வகையில், கனடாவில் வாழும் ஈழத்துப் புலம்பெயர் எழுத்தாளரான அ. முத்துலிங்கம் அவர்களின் சிறுகதைகளில் இடம்பெற்றுள்ள கலைச்சொற்களையும் அவை பயன்படுத்தப்பட்டுள்ள விதத்தினையும் இக்கட்டுரை ஆராய்கிறது.

திறவுச்சொற்கள்: கலைச்சொல்லாக்கம், அ.முத்துலிங்கம், சிறுகதைகள், மொழிநடை, கலைச்சொற்கள்

முன்னுரை :

கலைச்சொல் என்பது துறை வாரியான ஒரு சிறப்புச் சொற்களைக் குறிக்கும். தமிழில் துறைவாரியாக முன்னெடுக்கப்படுகிற இத்தகைய கலைச்சொல்லாக்க பணி மிகவும் இன்றியமையாத ஒன்றாகும். காலணிய ஆட்சிக்குப் பிறகே கலைச்சொல்லாக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இதனை அகராதியின் ஒரு தொடர்ச்சியாகவே பார்க்க முடிகிறது. இத்தகைய கலைச்சொற்கள் பெரும்பாலும் பின்வரும் மூன்று முறைகளில் தமிழிலக்கணத்தைப் பின்பற்றி உருவாக்கப்படுகின்றன.

1. ஒலிபெயர்ப்பு

2. மொழிபெயர்ப்பு

3. புதுச்சொல்லாக்கம்

இம்முறைகளில் உருவாக்கப்படும் கலைச்சொற்கள் சுருங்கிய வடிவிலும் அதே நேரத்தில், பொருளைத் தெளிவுப்படுத்துவதாகவும் இருக்க வேண்டும் என்று கூறப்படுகிறது. எவ்வாறு பேச்சு வழக்கில் இருக்கும் மொழியே வாழும் மொழியாக கருதப்படுகிறதோ, அதுபோல உருவாக்கப்படும் கலைச்சொற்கள் எல்லாம் அச்சமூகத்தில், பயன்பாட்டிற்கு வரும்போதுதான் அவை உருவாக்கப்பட்டதன் இலக்கை அடைகின்றது. இக்கலைச்சொற்களை ஊடகங்களின் வாயிலாகவோ, கல்வி பாடநூல் வாயிலாகவோ, எழுத்தாளர்களின் படைப்புகள் வாயிலாகவோ மக்களிடையே எளிதாகக் கொண்டுசெல்ல முடிகிறது. எழுத்தாளர்களின் படைப்புகள் என்று பார்க்கும்போது அவை பெருவாரியான மக்களிடையே வாசிப்புக்குட்படுத்தப்படுகின்றன. அதனால் அப்படைப்புகளில் இடம்பெறும் கலைச்சொற்களை மக்களால் எளிதில் அறிந்துக்கொள்ள முடிகிறது. அந்த வகையில் கலைச்சொற்களைத் தன்னுடைய படைப்புகளில் கையாண்ட புலம்பெயர் எழுத்தாளர்களுள் ஒருவர் அ.முத்துலிங்கம்.

அ.முத்துலிங்கத்தின் படைப்புகள் எல்லைக்கோடுகளை மீறிய ஒரு சர்வதேச பிரச்சனையைக் குறித்துப் பேசுகிறது. அ.முத்துலிங்கத்தின் சிறுகதைகள் இலங்கை, கனடா, அமெரிக்கா, சுவீடன், பாகிஸ்தான், நைஜீரியா, பிரான்ஸ், ஆப்பிரிக்கா ஆகிய நாடுகளைக் கதைக்களமாகக் கொண்டு விரிகிறது. இவருடைய கதைகள் இடத்திற்கு இடம் மாறுபடும் மொழி, இனம், நிறம், உணவு, பழக்கங்கள், சடங்குகள், சமய வழிபாடுகள் ஆகிய இயல்பான வேறுபாடுகளால் உருவாகும் அனுபவங்களின் தன்மையை வெளிப்படுத்துகின்றன. தன்னுடைய எழுத்துக்களைக் குறித்து அ.முத்துலிங்கம் கூறுவதாவது, “கம்ப்யூட்டரில் வந்து இறங்கும் மின்னஞ்சல்களைக் களம் நிறைந்ததும் அவ்வப்போது காலி செய்வது போல எனக்குள் சேரும் வார்த்தைகளை நான் அப்புறப்படுத்துகிறேன். அதுவே என் எழுத்தாகிறது.” (அ.முத்துலிங்கம் கதைகள்: **2003**: பக். **12**)

பல்வேறு நிலப்பரப்புகள் மாறுபட்ட பருவநிலைகள் நம்மினும் மாறுபட்ட பண்பாட்டுச் சூழலில் நிகழும் இவருடைய சிறுகதைகளில் பலவித உணர்வுகள் நிறைந்துள்ளன. அங்கதம் கலந்த இவரது கதைகளில் மனித உணர்வுகளின் இயக்கமும் நெகிழ்வும் துயரமும் விரவி வருவதைக் காண முடிகிறது. முன்னமே குறிப்பிட்டது போல, இவரது கதை நிகழும் களம் வெவ்வேறு நாடுகள் என்றபோதும் தமிழ் வாசகருக்கு அந்நியப்படாமலும் அதேசமயம் சொல்லவரும் செய்தி சிதைக்கப்படாமலும் அப்புனைவுகள் படைக்கப்பட்டிருக்கின்றன. இக்கருத்துக்கு வலுசேர்க்கும் விதமாக, “கதைகளின் அயல்தன்மை தெரியாமல் அவற்றை முத்துலிங்கத்தால் தமிழ் வாசகருக்குப் பரிமாற முடிகிறது. ஆகவே அவை வாசகப் பரப்பில் நிலைக்கின்றன கிளாசிக் படைப்புகள் ஆகின்றன” (இது முத்துலிங்கத்தின் நேரம்: **2023** : பக்.**30**) என்னும் மு.ராமநாதனின் கருத்து அமைகிறது.

மொழி நடையும் கலைச்சொல் பயன்பாடும்

முத்துலிங்கத்தின் எழுத்துகள் வாசகர்களைக் கதை நிகழும் காலகட்டத்திற்கே அழைத்துச் செல்கின்றன.

கதை வழி,

'அது பேசாத படம் ஓடிய காலம்' - பார்வதி (1994)

'ஜார்ஜ் மன்னர் படம் போட்ட ரூபாய் தாள்கள் புழக்கத்தில் இருந்த காலம்' - தில்லை அம்பலப் பிள்ளையார் கோயில் (1999- 2000)

'கதை நடந்தது சிலோனில் தான், ஸ்ரீலங்கா என்று பெயர் மாற்றம் செய்யும் முன்னர்' - ஆட்டுப்பால் புட்டு (2016)

இவருடைய மொழிநடை என்று பார்க்கும் பொழுது ஆரம்ப காலச் சிறுகதைகளில் இலங்கை வழக்கு, சமஸ்கிருதம், ஆங்கிலம், பொதுவான தமிழ் என்றவாறு கலந்து படைக்கப்பட்டுள்ளன. இதனை கடைசிக் கைங்கரியம் (1958), அக்கா (1959 - 1961), கோடை மழை (1959- 1961) போன்ற கதைகளின் வாயிலாக அறிய முடிகிறது. எனினும் இந்நடை அவர் அடுத்தடுத்து எழுதிய அனுலா (1959 - 1961), சங்கல்ப நிராகரணம் (1959 - 1961) ஆகிய கதைகளில் சற்று வளர்ந்து வந்திருப்பதை, அதாவது கதைச்சொல்லி கதையைச் சொல்லும் பொழுது பொதுத்தமிழ் வழக்கிலும் கதாபாத்திரங்களுக்கு இடையே நிகழும் உரையாடல் இலங்கைத் தமிழ் வழக்கிலும் இருப்பதைக் காணமுடிகிறது. இவ்வாறு பரிணாமம் அடைந்துகொண்டு வந்த இவருடைய தற்கால மொழிநடை ஒரு பொதுத்தமிழ் வழக்கில் இருப்பதோடு மட்டுமல்லாமல், கதைகளில் இடம்பெறும் அறிவியல் தொழில்நுட்பச் சொற்கள், அலுவல் ரீதியான சொற்கள், வீட்டு உபயோகப் பொருட்களின் பெயர்கள் அனைத்திலும் தமிழ்க்கலைச் சொல்லையே கையாண்டிருப்பதைக் காணமுடிகிறது.

கலைச் சொல்லாக்க முயற்சியில் இலங்கையின் இடம் இன்றியமையாதது; முக்கியத்துவம் வாய்ந்ததும் கூட. அத்தகைய இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட இவருடைய ஆரம்ப காலச் சிறுகதைகளில் கலைச் சொற்கள் பயின்று வந்திருப்பதைக் காணமுடிகிறது.

எடுத்துக்காட்டாக: வேக வளர்ச்சிக் கருவி (car accelerator) - ஊர்வலம்(1958)

1990களிலேயே கணினி, கணிப்பொறி போன்ற கலைச்சொற்களைத் தனது சிறுகதைகளில் கையாண்டு வந்திருக்கிறார். கம்ப்யூட்டருக்கு இணையான கணிப்பொறி என்ற கலைச்சொல்லைத் தமிழ்நாட்டு வழக்காகவும், கணினி என்ற கலைச்சொல்லை இலங்கை வழக்காகவும்

உருவாக்கினர். இதனை 1994, 1995, 1997 மற்றும் 1998களில் வெளிவந்த கலைச்சொல் அகராதிகளின் வாயிலாக அறியமுடிகிறது. இருந்தபோதும் இவர், இவ்விரு கலைச் சொற்களையும் தனது சிறுகதைகளில் எடுத்தாண்டுள்ளார்.

எடுத்துக்காட்டாக : 'கணிப்பொறி என்பது ஒரு ராட்சச வேலைக்காரன்' - கம்ப்யூட்டர் (1996 - 1997)

'Back space விசையை உடைத்து விட்டு கணினி நிரல் எழுதும் வல்லமை படைத்தவர்' - ஐந்தாவது கதிரை (1999 - 2000).

'கொள்கலன்' என்ற கலைச்சொல் கடன் (1999-2000) என்ற சிறுகதையில் கணினியின் குப்பைத் தொட்டியையும் (recycle bin), அடைப்புகள் (1999-2000) என்ற சிறுகதையில் தெருக்குப்பைத் தொட்டியையும் குறிக்கிறது. இங்கு, ஒரே தன்மையுடைய இச்சொல்லை வேறுபட்ட சூழலில் இடத்திற்கு ஏற்ப கையாண்டு வந்திருக்கிறார். 1999-2000களில் வெளிவந்த சிறுகதைகளில் வைய விரிவலை (www), குரல் அஞ்சல் (voice mail), மின்னஞ்சல் (e-mail) முதலான கலைச்சொற்களைக் கையாண்டு உள்ளார். மேற்கண்ட கலைச்சொற்களை 1997லிருந்து தொடர்ச்சியாக வெளிவந்த கலைச்சொல் அகராதிகளில் காணமுடிகிறது. இவ்வாறு கதைகளில் மட்டுமே கலைச்சொற்களைப் பயன்படுத்தி வந்த இவர், கதையின் தலைப்பினைக் குறிப்பிட கலைச்சொற்களைப் பயன்படுத்தி இருக்கிறார். எடுத்துக்காட்டாக: கடவுச்சொல் (2014).

இதுபோல உருவாக்கப்பட்ட கலைச்சொற்களைத் தனது கதைகளில் பயன்படுத்தி வந்ததோடு மட்டுமல்லாமல் பல புதிய கலைச்சொற்களை உருவாக்கி தனது கதைகளின் மூலம் எடுத்துரைக்கிறார். பீனிக்ஸ் பறவை (1995) என்ற சிறுகதையில் சூட்டுப்பேழை, கதிரியக்கச் சமையல், கதிற்றோன் கதிரலை குளியல் அல்லது கதிரியக்க குளியல் போன்ற சொல்லாடலையும், புவி ஈர்ப்பு கட்டணம் (2012) என்ற சிறுகதையில் புவி பயண கட்டணம், புவி பயணத்துறை, புவி ஈர்ப்பு கட்டணம், காற்று தூய்மையாக்க கட்டணம், சூரிய ஒளி கட்டணம் போன்ற சொல்லாடல்களையும் உருவாக்கிப் பயன்படுத்தி இருக்கிறார். மேலும் முத்துலிங்கம் சிறுகதைகளில் இடம்பெறும் கலைச்சொற்களை இங்குத் தொகுத்துக் கொடுத்துள்ளேன்.

1) அறிக்கை — report

2) உதிரி பாகம் - spare parts

3) உலர்த்தி, உலரி - dryer

4) ஒலிவாங்கி - mike

5) ஓடு தரை விளக்கு - *running way light*

6) கடன் அட்டை - *credit card*

7) கடவுச் சீட்டு —*passport*

8) கரு வங்கி - *egg bank*

9) கண்ணாடித் துடைப்பான் - *wiper*

10) குளிர்ப்பெட்டி - *fridge*

11) கைப்பேசி - *mobile phone*

12) கோப்பு - *document*

13) சலவை எந்திரம் - *washing machine*

14) சுழன்று ஏறும் படிகள் - *escalator*

15) சுழல் பாவிப்பு முறை — *recycle*

16) தண்ணீர்ப் போக்கி - *wash basin*

17) தானியங்கி எந்திரம் - *automatic machine*

18) தொலைநகல் — *fax*

19) தொலைக்காட்சி - *television*

20) தொலைப்பேசி — *telephone*

21) நுண் அலை அடுப்பு, சூட்டடுப்பு - *micro wave oven*

22) நேர்முகத் தேர்வு — *interview*

23) பச்சை அட்டை - *green card*

24) பயண முகவர் — *agent*

25) பயண அட்டை — *ticket*

26) பயணக் காசோலை - *traveler's cheque*

27) பாத்திரம் கழுவி - *vessel washing machine*

28) புத்தகத் தட்டு - *book rack*

29) மின்கணப்பு, கணப்பு - heater

30) மின் அடுப்பு - induction stove

31) மின்னோட்டம் - charge

32) மின் கதவு - electric door

முடிவுரை

தனிநபராலோ தமிழ் ஆர்வல அமைப்பினாலோ அல்லது அரசாலோ இன்றளவும் துறைவாரியாகச் கலைச்சொற்கள் உருவாகி வந்த வண்ணமே உள்ளது. இதனை செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககமும் இன்றளவும் இம்முயற்சியினைச் செய்துவருகிறது. இவ்வாறு உருவாக்கப்படும் கலைச்சொற்கள் அகராதிகளில் சேர்க்கப்படுவதன் மூலம், தமிழ்ச்சொல்வளம் பெருகி உள்ளது என்பதை நிறைவானது என்று கூறிவிட முடியாது. அவை இச்சமூகத்தில் பயன்பாட்டிற்கு வரும் பொழுதுதான் அதன் இலக்கினை அடைந்ததாகக் கொள்ளமுடியும். மேலும் எழுத்தாளர்களின் படைப்புகளில் இத்தகைய கலைச்சொற்கள் இடம்பெறுவது ஓரளவு அதன் இலக்கை எட்டிவிட்டதென்று கூறலாம். ஏனென்றால் இவர்களுடைய படைப்புகள் மக்களிடையே வாசிப்புக்கு உட்படுத்தபடுகின்றன. இத்தகைய தன்மைகள் முத்துலிங்கத்தின் படைப்புகளில் வெளிப்படுவதை நம்மால் காணமுடிகிறது. அதிலும் சிறு பொருட்களின் பெயர்களைத் தனது சிறுகதைகளில் எடுத்தாளும்பொழுது, அதாவது **உறிஞ்சி** (straw) - பூமாதேவி (1996-1997), **துடைப்பான்** (duster) - விசா (1996-1997) என்ற தமிழ்க்கலைச்சொல்லையே கையாண்டு இருக்கிறார்.

துணை நின்றவை

- இராமனாதன் மு. *இது முத்துலிங்கத்தின் நேரம்.* காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில், 2023.
- இறைக்குருவனார். *வாழ்வியல் சொல் அகரமுதலி.* தமிழ் நிலம் வெளியீடு, சென்னை, 2004.
- *கணிப்பொறி கலைச்சொல் அகராதி.* வளர்தமிழ் மன்றம் உரிமை, 1998
- *கலைச்சொல் அகராதி பகுதி-2.* கலைக்கதிர் வெளியீடு, கோயம்புத்தூர், 1985.
- *கலைச்சொல் பேரகராதி தொகுதி-2.* கலைச்சொல்லாக்கக் குழு, தமிழ்நாடு அரசு.
- மணவை முஸ்தபா. *மருத்துவ அறிவியல் தொழில்நுட்பக் கலைச்சொல் களஞ்சிய அகராதி.* மணவை வெளியீடு, மெட்ராஸ், 1994.

- மணவை முஸ்தபா. அறிவியல் தொழில்நுட்பக் கலைச்சொல் களஞ்சிய அகராதி. மணவை வெளியீடு, மெட்ராஸ், 1995.
- மணவை முஸ்தபா. மருத்துவக் கலைச்சொல் களஞ்சியம். மணவை வெளியீடு, மெட்ராஸ், 1996.
- மணவை முஸ்தபா. கணினி கலைச்சொல் களஞ்சிய அகராதி. மணவை வெளியீடு, மெட்ராஸ், 1999.
- முத்துலிங்கம் அ. அ.முத்துலிங்கம் கதைகள். தமிழினி பதிப்பகம், சென்னை, 2003.
- முத்துலிங்கம் அ. பிள்ளை கடத்தல் காரன். ஐந்தாம் பதிப்பு. காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில், 2023.
- முத்துலிங்கம் அ.கொழுத்த ஆடு பிடிப்பேன். ஆறாம் பதிப்பு. காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில், 2023.
- முத்துலிங்கம் அ. குதிரைக்காரன். ஏழாம் பதிப்பு. காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில், 2022.
- முத்துலிங்கம் அ அமெரிக்கக்காரி. ஒன்பதாம் பதிப்பு. காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில், 2022.
- மூர்த்தி அ கி. அறிவியல் அகராதி. மாணிக்கவாசகர் வெளியீடு, சென்னை, 1997.

Bibliography

- *Ramanathan M.itu Muttulikathin Neeram. Kalachuvadu publications,Nagercoil,2023.*
- *Iraiguruvanar,Vazhviyal chol Agaramuthali.Tamilnilam Veliyidu,Chennai,2004.*
- *Kanippori kalaichchol Agarathi.Valar tamil mandram Urimai,1998.*
- *Kalaichchol Agarathi paguthi 2.Kalaikkathir Veliyidu,Coimbatore,1985.*
- *Kalaichchol peragarathi Thoguthi-2.Kalaichchollakkakulu,Tamilnadu Arasu.*
- *Manavai Mustafa. Maruthuva Arivial Thozhilnutpak kalaichol kalangiya Agarathi.Manavai publications, Madras 1994.*
- *Manavai Mustafa.Arivial Thozhilnutpak kalaichol kalangiya Agarathi.Manavai publications ,Madras 1995.*
- *Manavai Mustafa. Maruthuva kalaichol kalangiyam. Manavai publications, Madras 1996.*

- *Manavai Mustafa. Kanini kalaichol kalangiya Agarathi. Manavai publications, Madras 1999.*
- *Muttulingam A.Muttulingam kathaikal.Tamizhini Publications,Chennai,2003.*
- *Muttulingam A. Pillai katattalkaaran. Fifth Edition, Kalachuvadu publications,Nagercoil, 2023.*
- *Muttulingam A. kozuttaatu pitippeen.Sixth Edition, Kalachuvadu publications,Nagercoil,2023.*
- *Muttulingam A. Kutiraikkaaran.Seventh edition, Kalachuvadu publications,Nagercoil, 2022.*
- *Muttulingam A. Amerikkakkaari. Ninth edition, Kalachuvadu publications,Nagercoil, 2022.*
- *Moorthi A K.Arivial agarathi.Manikkavasakar Veliyidu,Chennai,1997.*

இணையதளம்: www.sorkuvai.com

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.

வரும் 2026, அக்டோபர் மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள் - அக்டோபர் 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் அக்டோபர் இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com